# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 024/மா/2019**
**ஆணை நாள்: 10–09–2019**

| | | |
|---|---|---|
| 11/02/2019 நாளிட்ட தினகர் நாளிதழ் செய்தி | --- | **தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது** |
| மண்டல அலுவலர், மண்டலம் – 3, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை. | --- | **எதிர்மனுதாரர்** |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3, சூரப்பட்டு மதுரா மேட்டூர் பிரதான சாலையோரம் சிறுவர் பூங்கா மற்றும் உடற் பயிற்சி கூடத்திற்கான இரண்டரை ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அங்கு சிறுவர்களுக்கான விளாயாட்டு உபகரணங்கள் மற்றும் இளைஞர்களுக்கான உடற்பயிற்சி உபகரணங்கள் அமைக்கப்பட்டு அப்பகுதி சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பயன்படுத்தி வந்தனர் என்றும், தற்பொழுது இப்பூங்காவை மாநகராட்சி பராமரிக்காததால் புதர் மண்டியுள்ளது என்றும், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் பழுதடைந்துள்ளது என்றும், இந்நிலையில் இதனை பயன்படுத்தி போலி ஆவணங்கள் தயாரித்து பூங்கா இடத்தை ஆக்கிரமித்து விற்பணை செய்து வருகிறார்கள் என்றும், பூங்காவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று மக்கள் தெரிவிப்பதாக 11.02.2019 நாளிட்ட தினகரன் தமிழ் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து இப்பத்திரிக்கை செய்தியினை முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண்.024/2019 என எண்ணிடப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை:**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 03, சூரப்பட்டு மதுரா மேட்டூர் பிரதான சாலையோரம் அமைந்துள்ள சிறுவர் பூங்கா மற்றும் இளைஞர்கள் உடற்பயிற்சி கூடம் அமைந்துள்ள இரண்டரை ஏக்கர் நிலம் ஆக்கிரமித்து விற்பனை செய்து வருவதாகவும், மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி பூங்காவை சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்றும், மக்கள் தெரிவிப்பதாக 11.02.2019 நாளிட்ட தினகரன் தமிழ் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது.

இப்பத்திரிக்கை செய்தி தொடர்பான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க 19.02.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி, பெருநகர் சென்னை மாநகராட்சி, 3-வது மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, 3-வது மண்டல அலுவலர், 17.07.2019 நாளிட்ட தனது அறிக்கையில், 11.02.2019 நாளிட்ட தினகரன் நாளிதழில் மாநகராட்சி பூங்கா ஆக்கிரமித்து விற்பனை என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பான நிலம், வருவாய் துறைக்கு சொந்தமான மேய்கால் புறம்போக்கு நிலம் என்றும், இந்நிலமானது புழல் ஏரிக்கு அருகில் உள்ளது என்றும், மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்பு சூரப்பட்டு ஊராட்சியாக இருந்தபோது, ஊராட்சியால் இவ்விடத்தில் சிறுவர்கள் விளையாடுவதற்கான விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றும், மாநகராட்சியின் விரிவாக்கத்தின்போது இவ்விடம் மாநகராட்சியிடம் ஒப்படைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்விடத்தை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்ய மாதவரம் வட்டாச்சியருக்கு 29.1.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், இதுநாள் வரையில் மேற்படி இடத்தை ஒப்படைக்கவில்லை என்றும், இவ்விடத்தை மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்தால் அதனை சீரமைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றாற்போல் விளையாட்டு திடல் மற்றும் மேம்பாட்டு பணிகள் செய்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி கருதுகிறது என தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், பத்திரிக்கையில் வெளியான செய்தி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி 3-வது மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. மேற்படி, விற்பனை செய்வதை தடுக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி மேற்படி நிலத்தில் விளையாட்டுத்திடல் மற்றும் மேம்பாட்டு பணிகள் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு

கொண்டுவருவதற்கு ஏதுவாகவும், நில ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்கவும், மேற்படி நிலத்தினை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய உரிய முயற்சிகள் மேற்கொண்டு, மாநகராட்சியின் பராமரிப்பில் கொண்டு வரவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி 3வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 3, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.1, தட்டான் குளம் சாலை, மாதவரம், சென்னை – 600 060.

2. ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   சென்னை.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி